அனுப்புநர்

முனைவர். திரு. வி.சி. இராமேஸ்வரமுருகன்
இயக்குநர்,
பள்ளி சாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி
இயக்ககம்
சென்னை–06

பெறுநர்

மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்
அனைத்து மாவட்டங்கள்

ந.க எண். 743/ஆ3/2020, நாள்: 12.11.2020

பொருள் பள்ளி சாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி இயக்ககம், சென்னை–06 – **கற்போம் எழுதுவோம் இயக்கம் – புதிய வயது வந்தோர் கல்வித் திட்டம்** செயல்படுத்துதல் – **TN-EMIS கைபேசி செயலி** வாயிலாக கற்போர் (Learners) மற்றும் தன்னார்வல ஆசிரியர்கள் (Volunteer Teachers) விவரங்கள் பதிவேற்றம் செய்தல் – சார்பு

பார்வை
1. மத்திய அரசு கடித எண். No9-3/2020-NLM.1, நாள் : 08.05.2020,30.09.2020,14.10.2020
2. திட்ட ஒப்புதல் வாரியக் கூட்டம் (Project Approval Board(PAB) , நாள் : 21.10.2020
3. மாநில திட்ட இயக்குநர் மற்றும் உறுப்பினர் செயலர், தமிழ்நாடு எழுத்தறிவு முனைப்பு ஆணையம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற காணொளிக் கூட்ட நாள்:23.10.2020,04.11.2020
4. ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் (சமக்ர சிக்ஷா) திட்ட இயக்ககத்தில், TN-EMIS கைபேசி செயலி சார்ந்து நடைபெற்ற ஆலோசனைக் கூட்ட நாள்: 12.11.2020

*****

பார்வையிற் காணும் மத்திய அரசின் கடிதங்கள் மற்றும் 21.10.2020 அன்று நடைபெற்ற Project Approval Board(PAB) கூட்ட முடிவுகளின் படி, தமிழகத்தில், 2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பை அடிப்படையாகக் கொண்டு, 15 வயதுக்குமேற்பட்ட முற்றிலும் எழுதவும், படிக்கவும் தெரியாத கல்லாதோருக்கு, அடிப்படை எழுத்தறிவை வழங்கிடும் நோக்கில், தமிழ்நாடு எழுத்தறிவு முனைப்பு ஆணையத்தின் கீழ், பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககத்தின் மூலம் **கற்போம் எழுதுவோம் இயக்கம் என்கிற புதிய வயது வந்தோர் கல்வித் திட்டத்தை,** மத்திய மற்றும் மாநில அரசுகளின் 60:40 என்கிற நிதிப்பங்களிப்பின் கீழ், அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்தொடர்ச்சியாக, கற்போர்கள் (Learners) மற்றும் தன்னார்வல ஆசிரியர்கள் (Volunteer Teachers) ஆகியோரைக் கண்டறியும் பணிகள் மற்றும் மையங்களை அடையாளம் காணும் பணிகள் அனைத்து மாவட்ட அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவை சார்ந்த எண்ணிக்கை விவரங்கள் அனைத்தும் Google Spread Sheet வாயிலாக இவ்வியக்ககத்தினால் பெறப்பட்டுள்ளன.

மாநில திட்ட இயக்குநர் மற்றும் உறுப்பினர் செயலர், தமிழ்நாடு எழுத்தறிவு முனைப்பு ஆணையம் அவர்களின் வழிகாட்டுதல்களின் படி, தற்போது, அனைத்து மாவட்டங்களிலும் பெறப்பட்ட கற்போர்கள் (Learners) மற்றும் தன்னார்வல ஆசிரியர்கள் (Volunteer Teachers) ஆகியோரின் பெயர், வயது, ஆதார் எண் உள்ளிட்ட இதர விவரங்களை TN-EMIS கைபேசி செயலி வாயிலாக கீழ்கண்டுள்ளவாறு பெற திட்டமிடப்பட்டுள்ளது.

- TN-EMIS கைபேசி செயலியின் (Mobile App) வாயிலாக அனைத்து ஆசிரியர் பயிற்றுநர்களால் (BRTEs) கற்போர்கள் (Learners) மற்றும் தன்னார்வல ஆசிரியர்கள் (Volunteer Teachers) ஆகியோரின் விவரங்கள் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

- ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் (சமக்ர சிக்ஷா) திட்டத்தின் கீழ், அனைத்து ஆசிரியர் பயிற்றுநர்களுக்கும் TN-EMIS கைபேசி செயலி சார்ந்து ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள User Name and Password-யை பயன்படுத்தி மேற்கண்ட விவரங்களைப் பதிவேற்றம் செய்ய வேண்டும்.
- TN-EMIS கைபேசி செயலியின் Home Page பகுதியில் புதிதாக உருவாக்கி கொடுக்கப்பட்டுள்ள கற்போம் எழுதுவோம் (Karpom Ezhuthuvom) என்கிற ICONயை Click செய்து, அதற்குள் கொடுக்கப்பட்டுள்ள Add Learners மற்றும் Add Volunteer Teachers ஆகிய ICON வாயிலாக, கற்போர்கள் (Learners) மற்றும் தன்னார்வல ஆசிரியர்கள் (Volunteer Teachers) ஆகியோரின் விவரங்களை அனைத்து ஆசிரியர் பயிற்றுநர்களால் **13.11.2020 மாலை முதல் கைபேசியின் வாயிலாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும்.**
- அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள் கற்போர் கற்றல் மையங்களாக (Learners Literacy Centers) செயல்படும். எனவே, அனைத்து ஆசிரியர் பயிற்றுநர்களும் அவரவருக்கு ஒதுக்கப்பட்டுள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள் சார்ந்த கற்போர்கள் மற்றும் தன்னார்வல ஆசிரியர்கள் விவரங்களைத் TN-EMIS கைபேசி செயலியில் தவறாமல் பதிவேற்றம் செய்ய வேண்டும்.
- அரசு மற்றும் அரசு உதவி பெறும் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் அமைய உள்ள கற்போர் கற்றல் மையங்கள் (Learners Literacy Centers) கற்போரின் வசிக்கும் பகுதிக்கு அருகில் இல்லாதிருப்பின், கற்போர் குடியிருப்பின் அருகேயுள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் உயர் மற்றும் மேனிலைப் பள்ளிகளில் கற்போர் மற்றும் தன்னார்வலர்களின் விவரங்களைப் பதிவு செய்து, அந்தந்த பள்ளி வளாகத்திலேயே கற்றல் மையங்கள் (Learners Literacy Centers) செயல்பட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
- TN-EMIS கைபேசி செயலியின் வாயிலாக Learners-Volunteer Teachers Mapping செய்யப்படும். எனவே, செயலியில் கோரப்பட்டள்ள விவரங்களை அந்தந்த ஆசிரியர் பயிற்றுநர்களுக்கு ஏற்கனவே ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள பள்ளிகளின் அடிப்படையில் மிகக் கவனமாக பதிவேற்றம் செய்ய வேண்டும்.
- அந்தந்த மாவட்ட அளவில், அனைத்து ஊரக மற்றும் நகர் புற ஒன்றியங்களுக்கு இலக்கு நிருணயிக்கப்பட்டு, Google Spread Sheet வாயிலாக இவ்வியக்ககத்திற்கு வழங்கப்பட்டுள்ள கற்போர் எண்ணிக்கை மற்றும் தன்னார்வல ஆசிரியர்கள் எண்ணிக்கையின் படி, TN-EMIS கைபேசி செயலியில் கோரப்பட்டுள்ள கற்போர்கள் (Learners) மற்றும் தன்னார்வல ஆசிரியர்கள் (Volunteer Teachers) ஆகியோரின் விவரங்களைப் பதிவேற்றம் செய்ய வேண்டும்.
- கற்போர்கள் (Learners) மற்றும் தன்னார்வல ஆசிரியர்கள் (Volunteer Teachers) ஆகியோரின் விவரங்களை பதிவேற்றம் செய்திடும் முறைகள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.
- கற்போர்கள் (Learners) மற்றும் தன்னார்வல ஆசிரியர்கள் (Volunteer Teachers) ஆகியோரின் விவரங்களை பதிவேற்றம் செய்திடுதல் சார்ந்த தொழில்நுட்ப உதவிக்கு tnemiscel@gmail.com, dnfae.tn@nic.in ஆகிய மின்னஞ்சல்கள் வாயிலாகத் தொடப்பு கொள்ளலாம்.
- TN-EMIS கைபேசி செயலியில் கற்போம் எழுதுவோம் (Karpom Ezhuthuvom) ICON வாயிலாக மேற்கொள்ளப்படும் அனைத்து மாவட்டம், ஒன்றியம் மற்றும் பள்ளிகள் வாரியான

பதிவேற்ற விவரங்கள், ஆசிரியர் பயிற்றுநர்கள் வாரியான விவரங்கள், ஒவ்வொரு நாளும் பதிவேற்றப்பட்ட கற்போர்கள் (Learners) மற்றும் தன்னார்வல ஆசிரியர்கள் (Volunteer Teachers) விவரங்கள் ஆகியனவற்றை, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி (சமக்ர சிக்ஷா) மாநிலத் திட்ட இயக்குநர், பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்குநர், இணை இயக்குநர் ஆகிய அலுவலர்களால் பதிவிறக்கம், கண்காணிப்பு மற்றும் ஆய்வு செய்திடும் வகையில் EMIS Website–ல் பிரத்யேக வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

மேலும், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி ஆசிரியர் பயிற்றுநர்கள் அனைவரும், கற்போம் எழுதுவோம் திட்டக் கற்போர்கள் (Learners) மற்றும் தன்னார்வல ஆசிரியர்கள் (Volunteer Teachers) ஆகியோரின் விவரங்களை 13.11.2020 முதல் 21.11.2020க்குள் தவறாது பதிவேற்றம் செய்திட வேண்டும். இது சார்ந்த ஆய்வுக் கூட்டம் 18.11.2020 அன்று மாலை 5 மணியளவில் அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் காணொளி வாயிலான ஆய்வுக் கூட்டம் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் (சமக்ர சிக்ஷா) மாநில திட்ட இயக்குநர் மற்றும் உறுப்பினர் செயலர், தமிழ்நாடு எழுத்தறிவு முனைப்பு ஆணையம் அவர்களின் தலைமையில் நடத்தப்படும்.

எனவே, முன்குறிப்பிட்டுள்ள வழிமுறைகளின் படி, TN-EMIS கைபேசி செயலியில் கற்போர்கள் (Learners) மற்றும் தன்னார்வல ஆசிரியர்கள் (Volunteer Teachers) ஆகியோரின் விவரங்களை 13.11.2020 மாலை முதல் 21.11.2020க்குள் கைபேசியின் வாயிலாக அனைத்து ஆசிரியர் பயிற்றுநர்களால் பதிவேற்றம் செய்திட உரிய உடன நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளவும், இது சார்ந்து 18.11.2020 அன்று மாலை 5 மணியளவில் நடைபெற உள்ள காணொளி வாயிலான ஆய்வுக் கூட்டத்தில் உரிய விவரங்களுடன் (18.11.2020 அன்று 4 மணி வரையிலான TN-EMIS கைபேசி செயந பதிவேற்ற விவரங்கள் உள்பட) பங்கேற்கவும் அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு:

கற்போர்கள் (Learners) மற்றும் தன்னார்வல ஆசிரியர்கள் (Volunteer Teachers) ஆகியோரின் விவரங்களை பதிவேற்றம் செய்திடும் முறைகள்

12/11/20

இயக்குநர்,
பள்ளி சாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி இயக்ககம்
சென்னை–06

நகல் பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

1. அரசு முதன்மைச் செயலர் அவர்கள்
   பள்ளிக் கல்வித் துறை, தலைமைச் செயலகம், சென்னை–09

2. மாநில திட்ட இயக்குநர் மற்றும் உறுப்பினர் செயலர்
   ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மற்றும் தமிழ்நாடு எழுத்தறிவு முனைப்பு ஆணையம்
   சென்னை–06

நகல் (சார்ந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் வாயிலாக)

1. அனைத்து மாவட்ட மற்றும் வட்டாரக் கல்வி அலுவலர்கள்,
2. அனைத்து ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி வட்டார வள மையம் (பொ) மேற்பார்வையாளர்கள் மற்றும் ஆசிரியர் பயிற்றுநர்கள்.